இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்
ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்
சென்னை–34

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/
வருவாய் நிருவாக ஆணையர்
சேப்பாக்கம், சென்னை–5

ந.க.எண்.49586/2021/பி1, நாள். 22,11.2021

அய்யா,

பொருள்: பொதுப்பணிகள்–இந்து சமய அறநிலையத்துறை – திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் மேலாண்மை – பல்வேறு தொடர் நடவடிக்கைகள் எடுத்தல் – உதவி ஆணையர் அலுவலகங்களில் வட்டாட்சியர் நிலையில் புதியதாக பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டது – தொடர் நடவடிக்கை எடுத்தல் –குறித்து

பார்வை: 1) அரசாணை(நிலை) எண்.1364, வணிகவரி மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.29.11.1983
2)அரசாணை(நிலை) எண்.167, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை நாள்.19.11.2021
3) இவ்வலுவலக செமு.ந.க.49586/2021/பி1 நாள். .11.2021

------

2021–2022–ஆம் ஆண்டின் வரவு செலவு கூட்டத் தொடரில் இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது,

"திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை விழிப்புடன் பாதுகாத்து மீட்பதற்கு 38 மாவட்டங்களில் உள்ள உதவி ஆணையர் அலுவலங்களில் வட்டாட்சியர் உள்பட 108 பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்கான செலவு ஆண்டொன்றிற்கு ரூபாய் 8 கோடியே 18 இலட்சம்"

3) பார்வைக் குறிப்பு 2–ல் காணும் அரசாணையில், இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக இந்து சமய அறநிலையத்துறையின் மாவட்ட அளவிலான 36 உதவி ஆணையர் அலுவலங்களிலும் தலா ஒரு பணியிடம் வீதமாக 36 வட்டாட்சியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இந்த 36 சிறப்பு வட்டாட்சியர் பணியிடங்களும் வருவாய்த் துறையின் மூலம் அந்தந்த மாவட்ட அலகிலிருந்து மாற்றுப் பணி அடிப்படையில் (on deputation basis) நிரப்பிடலாம் எனவும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

4) பார்வைக் குறிப்பு 1–ல் காணும் அரசாணை(நிலை) எண்.1364, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை நாள்.29.11.1983–ல் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணையில், ஒட்டுமொத்த பணியிட எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தாமல் பணியிடங்களின் தலைமையிடத்தினை மாற்றம் செய்தல்/நிர்ணயம் செய்திட ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

5) இதனடிப்படையில் பார்வைக்குறிப்பு 2–ல் காணும் அரசாணையில் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 36 வட்டாட்சியர், 36 தட்டச்சர்கள் மற்றும் 36 அலுவலக உதவியாளர் பணியிடங்கள் உள்ளிட்ட 108 பணியிடங்களை பகிர்மானம் செய்து பார்வைக் குறிப்பு 3–ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

6) புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 36 சிறப்பு வட்டாட்சியர்களைப் பொருத்தவரையில் அந்தந்த மாவட்ட வருவாய் அலகிலிருந்து மாற்றுப் பணி அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் எனவும், இதர தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர்கள் இத்துறை பணித் தொகுதியிலிருந்து நியமனம் செய்யப்படும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

7) புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 36 சிறப்பு வட்டாட்சியர் பணியிடங்களைப் பொருத்தவரையில் அந்தந்த மாவட்ட வருவாய் அலகிலிருந்து மாற்றுப் பணி அடிப்படையில் (on Deputation of Service ) நிரப்பப்படவேண்டும் என்பதால் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிட கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பணியிடம் ஒதுக்கீடு செய்யப்படும் இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் பிரிவு | சிறப்பு வட்டாட்சியர் பணியிடம் நியமனம் செய்ய வேண்டிய மாவட்ட வருவாய் அலகு | அனுமதிக்கப் படும் சிறப்பு வட்டாட்சியர் பணியிடங்கள் எண்ணிக்கை (சம்மந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலகு மூலம் நிரப்பப்வேண்டும்) |
|---|---|---|---|
| 1. | சென்னை | சென்னை | 1 |
| 2. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 1 |
| 3. | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | 1 |
| 4. | திருவள்ளூர் | திருவள்ளூர் | 1 |
| 5. | வேலூர் | இராணி பேட்டை | 1 |
| | | திருப்பத்தூர் | 1 |
| 6. | விழுப்புரம் | விழுப்புரம் | 1 |
| 7. | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | 1 |
| 8. | திருவண்ணா மலை | திருவண்ணா மலை | 1 |
| 9. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 1 |
| 10. | சேலம் | சேலம் | 1 |
| 11. | தருமபுரி | தருமபுரி | 1 |
| 12. | ஈரோடு | ஈரோடு | 1 |
| 13. | நாமக்கல் | நாமக்கல் | 1 |
| 14. | திருப்பூர் | திருப்பூர் | 1 |
| 15. | கரூர் | கரூர் | 1 |
| 16. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1 |
| 17. | அரியலூர் | அரியலூர் | 1 |
| 18. | திருச்சி | திருச்சி | 1 |
| 19. | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1 |
| 20. | மயிலாடுதுறை | மயிலாடுதுறை | 1 |
| 21. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1 |
| 22. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1 |
| 23. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 1 |
| 24. | திருவாரூர் | திருவாரூர் | 1 |
| 25. | விருதுநகர் | விருதுநகர் | 1 |
| 26. | திண்டுக்கல் | திண்டுக்கல் | 1 |
| 27. | தேனி | தேனி | 1 |
| 28. | சிவகங்கை | சிவகங்கை | 1 |
| 29. | பரமக்குடி | இராமநாதபுரம் | 1 |

| வ. எண். | பணியிடம் ஒதுக்கீடு செய்யப்படும் இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் பிரிவு | சிறப்பு வட்டாட்சியர் பணியிடம் நியமனம் செய்ய வேண்டிய மாவட்ட வருவாய் அலகு | அனுமதிக்கப் படும் சிறப்பு வட்டாட்சியர் பணியிடங்கள் எண்ணிக்கை (சம்மந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலகு மூலம் நிரப்பப்வேண்டும்) |
|---|---|---|---|
| 30. | திருநெல்வேலி | திருநெல்வேலி | 1 |
| 31. | நாகர்கோவில் | கன்னியாகுமரி | 1 |
| 32. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 1 |
| 33. | தென்காசி | தென்காசி | 1 |
| | | மொத்தம் | 34 |

| வ. எண் | அலுவலகம் | சிறப்பு வட்டாட்சியர் நியமனம் செய்யவேண்டிய மாவட்ட வருவாய் அலகு | சிறப்பு வட்டாட்சியர் பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 34. | சென்னை ஆணையர் அலுவலகம் | சென்னை மாவட்ட வருவாய் அலகு | 2 |
| | | கூடுதல் | 36 |

8) சென்னை மாவட்டத்தில் வட்டாட்சியர் பற்றாக்குறை ஏற்படின் அருகிலுள்ள காஞ்சிபுரம், செங்கற்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்ட அலகில் இருந்து பெற்று நிரப்பிக்கொள்ள அனுமதி அளித்திடவும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9) மேலும், நீலகிரி மாவட்டத்தில் இத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதினால் நீலகிரி மாவட்டத்திற்கென தனியே உதவி ஆணையர் அலுவலகம் இல்லாத காரணத்தினாலும், நீலகிரி மாவட்ட ஆட்சி எல்லை இத்துறை கோயம்புத்தூர் உதவி ஆணையர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, நீலகிரி மாவட்டத்திற்கு தனியே சிறப்பு வட்டாசியர் பணியிடம் தேவையில்லை எனவும், கோயம்புத்தூர் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு நியமனம் செய்யப்படும் வட்டாச்சியரே நீலகிரி மாவட்டம் தொடர்பாக பணிகளை கவனிக்கும் வகையில்

உத்தரவிடுவது போதுமானதாக இருக்கும் எனவும் மேற்கண்ட பணியிடத்தினை கோயம்புத்தூர் வருவாய் மாவட்ட அலகிலிருந்து நிரப்பிடும் வகையில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கலாம் எனவும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்)ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உண்மை நகல்/உத்தரவின்படி/

கண்காணிப்பாளர் 22-11-2021